1981 மார்ச் 26]

திரு. து. புருஷோத்தமன் : துவங்கப்பட்ட இருக்கின்றவற்றில் சைதாப்பேட்டையிலே ஒன்று துவங்கப்பட வேண்டுமென்பது தான் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. இப்போது இருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் வெளியே சென்று சாயம் துவைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொண்டு சாயத் தொழிற்சாலையை அங்கே அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சிறிய அளவிலே, கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் நடத்துகின்றன. அவை போதுமான அளவுக்கு இருக்கின்றன. அவை தவிர 7 இடங்களில் பெரிய அளவிலே 90 இலட்ச ரூபாய் செலவிலே ஏற்படுத்தப் படுகின்றன என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அவற்றில் 4 ஏற்கெனவே முழுமைபெற்று பணியைத் துவங்கிவிட்டன. இன்னும் 3 விரைவில் ஏற்படுத்தப்படும். சைதாப்பேட்டையிலே கூட்டுறவுச் சங்க சாயத் தொழிற்சாலை ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள பஞ்சாலைகளிலே ஸ்பின்னிங் மில்ஸ்தான் அதிகமாக இருக்கின்றன. காம்போஸ்ட் யூனிட்டுகள் இல்லை. என்.டி.சி. நிறுவனம் பாண்டிச்சேரியிலே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சைதாப்பேட்டையில் உள்ள சாயத் தொழிற்சாலை பற்றியது.

*Setting up of a Jasmine Oil Factory.*

*Q. No. 491—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minsiter for Agriculture be pleased to state:—

(*a*) whether the Agro Industriss Corporation, Tamil Nadu is planning to set up a Jasmine Oil Facto y in this State; and

(*b*) If so, the details there of ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தமிழ்நாட்டில் மல்லிகைப் பூ எண்ணெய் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது. கீழ்க்காணும் சில முக்கிய தேவைகள் நிறைவு செய்யப்பட்டால்தான் மேற்படி தொழிற்சாலை அமைப்பது சாத்தியமாகும் என வேளாண் இயக்குநர் தெரிவித் துள்ளார்.

1. உலகச் சந்தையில் இத்தயாரிப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்குத் தேவையான தொழில் நுணுக்கம்.

2. உலகச் சந்தையில் இடம் பெறக் கூடிய தகுதி.

3. தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே குறிப்பிட்ட இடத்திற்குள், உயர்தர மல்லிகைப்பூ கிடைத்தல்.

4. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் கிடைத்தல்.

5. உற்பத்தி வரையறை.

மேலே கூறப்பட்டவைகளை ஆராய்ந்த பின்னர்தான் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமா என்பது பற்றி முடிவு எடுக்க முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப்பூவிலிருந்து தயாரிக்கக்கூடிய ஜாஸ்மைன் எண்ணெய் சிறிய பூவிலிருந்து தயாரிக்கப்படுகிறதா அல்லது குண்டு மல்லீ என்று சொல்லுவார்களே, அதிலிருந்து எடுக்கப்படுகிறதா? அந்தப் பூக்களை வயல்களிலிருந்து அரை மணி நேரத்திற்குள் பேக்டரிக்குக் கொண்டுவந்தால்தான் எண்ணெய் எடுக்க முடியும் என்று சொல்கிறார்களே அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தமிழகத்திலே 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே மல்லிகைப் பூச்செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு நம் மாநிலத்திலேதான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. உயர்தர மல்லிகைப் பூக்களிலிருந்துதான் சாறு தயாரிக்கும் முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பறிக்கப்பட்ட பூக்களின் புதுத் தன்மைகள் கெடாமல் இருக்கின்ற வசதிகளை இங்கே பெற்றதற்குப் பிறகுதான் அத்தகைய தொழிற்சாலையை நாம் உருவாக்க முடியும்.

### *Research into 'Sorghum' Maize.*

*Q. 492—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any research into 'Sorghum'-Maize is being conducted in this State by the (1) Agriculture Directorate and (2) Agricultural University and

(b) if so, the details thereof.